செய்தி வெளியீடு எண்:737 நாள்: 02.11.2017

<u>செய்தி வெளியீடு</u>

# மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ரூ.962.50 கோடி செலவில் 3.85 இலட்சம் மெ.டன் கூடுதல் அரிசி வாங்க உத்தரவு.

தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம் தமிழகத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டப் பிறகு அனைவருக்குமான பொதுவிநியோகத்திட்டத்தின்படி அனைத்துத் தரப்பினருக்கும் அரிசியினை தடையின்றி விநியோகம் செய்திட மத்திய அரசு தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம் செயல்படுத்துவதற்கு முன்னர் ஒதுக்கீடு செய்யப்பட்டு வந்த 2.92 இலட்சம் மெ.டன் அரிசியினை மட்டுமே தமிழகத்திற்கு ஒதுக்கீடு செய்து வருகிறது. ஆனால் தற்போது தமிழ்நாட்டில் நடைமுறையில் உள்ள அனைவருக்குமான பொது விநியோகத் திட்டத்தின் கீழ், தடையின்றி அரிசியினை விநியோகம் செய்திட தேவைப்படும் நுகர்வின் அடிப்படையில் மாதம் ஒன்றிற்கு சராசரியாக 3.20 இலட்சம் மெ.டன் அரிசி தேவைப்படுகிறது. இதனால் மாதமொன்றிற்கு கூடுதலாக 28,000 மெ.டன் அரிசி தேவைப்படுகிறது. இந்த இடைவெளியை ஈடுசெய்யும் பொருட்டு தமிழ்நாடு நுகர்பெருள் வாணிபக் கழகத்தால் கடந்த ஏப்ரல் 2016 முதல் ஆகஸ்ட் 2017 வரை மத்திய அரசின் ஒதுக்கீட்டைவிட கூடுதலாக விநியோகம் செய்யப்பட்ட 3.85 லட்சம் மெ. டன் அரிசியினை மக்களின் நலன் கருதி, பொது விநியோகத் திட்டத்தின் மூலம் அரிசியினை தொடர்ந்து விநியோகம் செய்ய எதுவாக, இந்திய உணவுக் கழகம் (Food Corporation of India) நிர்ணயித்த விலையான மெ.டன் ஒன்றிற்கு ரூ.25,000 வீதம் 3.85 லட்சம் மெ. டன் அரிசியினை ரூ.962.50 கோடிக்கு இந்திய

உணவுக் கழகத்திடமிருந்து கொள்முதல் செய்ய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

இந்த நடவடிக்கையின் மூலம் தமிழ்நாட்டில் அனைவருக்குமான பொதுவிநியோகத்திட்டத்தின் படி அனைத்து தரப்பு மக்களுக்கும் விலையில்லா அரிசியினை தேவையான அளவு தொடர்ந்து வழங்கிட தமிழக அரசு உறுதி செய்துள்ளது.

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**